C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

பொழிவு : 16 SEPTEMBER 2024 ஆகாரம் : 09

**நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும்**

## நம்மில் ஒன்றாயிருக்கவும்

**வேண்டிக்கொள்ளுகிறேன்.**

**-யோவான் 17:21**

That All Of Them May Be One, Father, Just As

## YOU ARE IN ME AND I AM IN YOU.

-John 17:21



# SEPTEMBER 2024

# UPCOMING EVENTS

**ALL** — **Wednesday**
7:30pm

Bible study & Prayer
Parsonage
Presbyter - 0567668348

**14**
**28** — **Saturday**
7:30pm

Evening service
Presbyter - 0567668348

**07**
**21** — **Saturday**
7:30pm

Holy communion service
Presbyter - 0567668348

**14** — **Saturday**
9.00pm - 9.30pm

Men's Fellowship Prayer
Mr. Ashok Kumar
0508429659

**20** — **Friday**
8:00pm

Women's Fellowship Prayer
Mrs.Sagena Livingston
0553896871

**27** — **Friday**
8:00pm

Youth Fellowship Prayer
Mr.Stephen Chellaraj
0569906933

# FROM THE PASTOR'S DESK



**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் வாழ்த்துக்கள்.**

ஆண்டவர் இயேசுவின் தயவால் இந்த ஆண்டின் எட்டு மாதங்களை முடித்து, செப்டம்பர் மாதத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற நாம் ஒவ்வொருவரும் கடவுளுக்கு நன்றி பலி செலுத்துவோம்.

1844 ஆம் ஆண்டு அலெக்ஸாண்டர் டுமாஸ் என்பவர் எழுதிய மூன்று துப்பாக்கி வீரர்கள் (THE THREE MUSKETEERS) அல்லது பிரிக்க முடியாத மூன்று (THE THREE INSEPARABLE) என்ற பிரெஞ்ச் நாவலில் அதோஸ், போர்த்தோஸ், ஆராமிஸ் ஆகியோர், "ஒருவருக்காக அனைவர், அனைவருக்காக ஒருவர்" என்று வாழ்ந்த இணை பிரியா நண்பர்களின் அன்பை வெளிப்படுத்தி நாவல் முழுமையும் அமைந்துள்ளது. பிரியமானவர்களே, உலகிலே மனுக்குலம் ஒருவரில் ஒருவர் அன்பாயிருக்கவும், அனைவரும் ஒன்றாக இருக்கவுமே ஆண்டவர் இயேசு விரும்புகிறார்.

செப்டம்பர் மாதம் தென்னிந்திய திருச்சபை (CHURCH OF SOUTH INDIA) வரலாற்றில் முக்கியமானதாகும். திருச்சபையின் ஒருமைப்பாட்டுச் சிற்பி என்று அழைக்கப்படும் பிஷப்.அசரியா ஐயா அவர்கள் தான் தென்னிந்திய திருச்சபை உருவாவதற்கு வித்திட்டவர். 1947 ஆம் ஆண்டு செப்டம்பர் 27ஆம் தேதி அன்று சென்னையில் உள்ள தூய.ஜார்ஜ் கதீட்ரல் ஆலயத்தில் மெதடிஸ்ட், பிரிஸ்பிட்டேரியன், காங்கிரிகேஸ்னல்ஸ், புராட்டஸ்டன்ட் ஆகிய திருச்சபைகள் ஒன்றிணைந்து உருவானதே "தென்னிந்திய திருச்சபை" என்ற உலகளாவிய மாபெரும் திருச்சபை ஆகும். இது தமிழகம், ஆந்திரா, தெலுங்கானா, கர்நாடகா, கேரளா, புதுச்சேரி, இலங்கை ஆகிய பகுதிகளின் திருச்சபைகளில் உள்ள நான்கு மில்லியன் உறுப்பினர்களை உள்ளடக்கி, "எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக" (THAT THEY ALL MAY BE ONE) என்ற பொன்மொழியுடன் இயங்கி வருகிறது. ஆண்டவர் இயேசுவுக்கே மகிமை உண்டாவதாக.

"நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறது போல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொள்கிறேன்" (யோவான் 17:21

**நிலைத்திருங்கள்:**

நமக்காகத் தம்மையே சிலுவையில் ஈந்த ஆண்டவர் இயேசுவில் நிலைத்திருக்க வேண்டும். (யோவான் 15:4) இயேசுவில் நிலைத்திருந்தால் மட்டுமே கனி நிறைந்த அதாவது நிறைவான வாழ்வடைய முடியும்.இன்றைய காலச் சூழலில் மனிதரின் நாட்டமும் ஓட்டமும் உலகினையே நோக்கி அதில் நிலைத்திருக்கிற நிலை உள்ளதை எண்ணிப் பார்க்க அழைக்கப்படுகிறோம். கிறிஸ்தவராக, ஆண்டவர் இயேசுவின் அளவிட முடியாத அன்பிலே நிலைத்திருங்கள்.

**ஒன்றாய் இருங்கள்:**

மெய்யான திராட்சச் செடியாம் இயேசுவில், கொடிகளாகிய ஒவ்வொருவரும் ஒன்றாயிருக்க வேண்டும். ஆண்டவர் இயேசுவேயே சார்ந்து,சேர்ந்து வாழ்வது மெய் கிறிஸ்தவ வாழ்வு ஆகும்.இதனை தூய.பவுல் அடியார் குறிப்பிடும் போது, ஆண்டவர் இயேசுவுக்காக எல்லாவற்றையும் குப்பையாக எண்ணுகிறேன். (பிலிப்பியர் 3:11) அதாவது, உலகம் சார்ந்த அனைத்தையும் உதறி, இயேசு கிறிஸ்துவோடு ஒன்றாகி விட்டேன் என்று பிலிப்பியர் 1: 21—ல் கிறிஸ்து எனக்கு ஜீவன் என்று எழுதுகிறார்.

பிரியமானவர்களே, இறை மக்களாக ஆண்டவர் இயேசுவில் நிலைத்திருக்கவும் அவரோடும், உலகத்தில் உள்ள சகோதர சகோதரிகளோடும் ஒன்றாக இருந்து ஆண்டவருக்கு மாட்சியாக, உலகிற்கு சாட்சியாக (யோவான் 17:21) வாழவும் அழைக்கப்படுகிறோம். சிந்தித்து, சீரான வாழ்வு வாழ்வோம். ஆண்டவர் இயேசு கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பாராக, ஆமென்.

இறைப்பணியில்,ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan



# உண்மையுள்ளவர்

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் வாழ்த்துக்கள்.

கடுமையான பஞ்சகாலம் கடைசி உணவைத் தயாரிக்க ஒரு சில விறகு குச்சிகளை பொருக்கிக் கொண்டிருந்தபோது, "எலியா என்ற இறைவாக்கினர் கடவுளின் கட்டளைப்படி சாறி பாத் விதவையை சந்திக்கிறார்" அநேக வசதியானவர்கள் இருந்த கிராமத்தில் இந்த ஏழை விதவையின் வீட்டை தேடிச் செல்கிறார். காரணம், எலியாவிற்குள் இருந்த ஆண்டவர் முகத்தை பார்ப்பவர் அல்ல, உள்ளத்தை ஆராய்ந்து அறிபவர்.

எலியா அந்த விதவையை நோக்கி,குடிக்க தண்ணீர் கொண்டு வா என்றார். அப்போது நினைத்திருப்பாள் அந்த பெண் நல்ல வேலை உணவு கேட்கவில்லை என்று.தண்ணீர் கொண்டு வர போகும் போது, எலியா கொஞ்சம் அப்பமும் கொண்டு வா என்று கூறியதும் மிகவும் வருத்தம். ஆனால் உள்ளதை உள்ளபடி கூறிவிடுகிறார் (1இராஜாக்கள் 17:12) பானையில் ஒரு பிடி மாவும், கலயத்தில் கொஞ்சம் எண்ணையுமே அல்லாமல் ஒன்றும் இல்லை என்று சத்தியம் செய்கிறாள். நானும் என் மகனும் இந்த உணவை சாப்பிட்டுவிட்டு சாகப் போகிறோம் என்று கூறிய பின், முதலில் சுடும் அப்பத்தை என்னிடத்தில் கொண்டு வா என்கிறார்.

இது என்ன சோதனை வறுமையை வாய்விட்டுச் சொல்லியும் பரிதாபப்படாமல், முதல் அப்பத்தைக் கொண்டு வா என்கிறார் என வேறு எவராக இருந்தாலும் நினைத்திருப்பார்கள். ஆனால் இந்த ஏழை சகோதரி அப்படி எதையும் நினைக்காமல், வறுமையிலும் அதாவது இது சாதாரண வறுமை இல்லை இதுதான் சோதனை என்பது. முதல் அப்பத்தை எலியா தீர்க்கதரிசிக்கு கொண்டு வந்து தருகிறாள். அவர் அதை உண்டு பஞ்சகால முடியும் வரை, மா செலவழிந்து போவதுமில்லை, எண்ணை குறைந்து போவதுமில்லை என்று கர்த்தர் சொல்கிறார் என்று கூறி ஆசீர்வதித்தார். அப்படியே பஞ்ச காலம் முடியும் வரை உணவுக்கு பஞ்சமின்றி அவர்கள் புசித்தார்கள்.

- நாம் குறைவு பட்டாலும் உள்ளதை உள்ளபடி உண்மையாக சொல்லும்போது, கடவுள் ஆசிர்வதிக்கிறார்.

- எளியவர்களை, ஏழைகளை, வேதனையில் உள்ளவர்களை தேடி வருகிறவரே நம் ஆண்டவர்.

- உங்களை திக்கற்றவர்களாக விடேன் என்ற இறை வார்த்தையின்படி அவரைப் பற்றிக் கொண்டால், நம்முடன் இருந்து நிறைவாக வழி நடத்துபவரே ஆண்டவர் இயேசு.

- நம்முடைய தாழ்வில் நம்மை நினைத்தவரை துதியுங்கள்,அவர் கிருபை என்றும் உள்ளது (சங்கீதம் 136:23)

பிரியமானவர்களே, நாம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை பற்றி கொண்டு வாழும் போது எந்த காலத்திலும் நமக்கு நிறைவைத்தந்து நம்மை ஆசீர்வதிப்பார், ஆமென்.

இறைப்பணியில்,

ஆயரம்மா

Mrs . P . Velanganni





# செயலர் மடல்

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். இந்த ஆண்டின் கடந்த மாதங்கள் முழுவதையும் நம் அனைவரையும் கண்மணி போல் காத்த கர்த்தருக்கே ஸ்தோத்திரம். நமது திருச்சபையின் அறுவடை பண்டிகையின் WEEKLY FOOD SALES ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் நேர்த்தியாக நடைபெற்று வருகிறது. திருச்சபை மக்கள் அனைவரும் உற்சாகத்தோடு தொடர்ந்து பங்கு கொள்ள அன்போடு கேட்டுக்கொள்கிறேன். நமது திருச்சபையின் அறுப்பின் ஸ்தோத்திரப் பண்டிகை வருகிற நவம்பர் மாதம் முதல் வாரத்தில் கொண்டாட திட்டமிட்டி ருக்கிறோம் அது எந்த தடைகளும் இல்லாமல் மகிழ்ச்சியோடு நடைபெறுவதற்கு எல்லோரும் ஜெபிக்கவும், உழைக்கவும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.வருகிற மாதங்களில் அறுவடை பண்டிகைக்காக திருச்சபை மக்களின் வீடுகளை சந்திக்க திட்டமிட்டு இருக்கிறோம். திருச்சபையார் உங்கள் ஆதரவை தருமாறு அன்போடு கேட்கிறேன். சிறுவர் ஊழியத்தின் CHAMP FOR CHRIST செப்டம்பர் மாதம் 14ஆம் தேதி நடைபெற உள்ளது. பிள்ளைகள் அனைவரும் உற்சாகத்தோடு பங்கேற்க கேட்டுக்கொள்கிறோம்.மற்றும் நமது திருச்சபையில் நடைபெறும் ஒவ்வொரு ஊழியங்களாகிய ஆண்கள் ஐக்கிய சங்கம், பெண்கள் ஐக்கிய சங்கம், வாலிபர் ஐக்கிய சங்கம், சிறுவர் ஊழியம், பாடகர் குழு அனைத்து ஊழியங்களிலும் ஜெபித்து பங்கேற்குமாறு அன்புடன் கேட்கிறேன்.

கர்த்தர் கடந்த ஒரு வருடமாக திரு C. ஹெவின் ஹெபா அவர்களை செயலர் பணியில் மிக நேர்த்தியாக ஊழியத்தை நிறைவேற்றியதற்காக கடவுளுக்கு ஸ்தோத்திரங்களையும், அவர்களுக்கு திருச்சபையாக நன்றிகளையும் தெரிவிக்கிறோம். திருச்சபையினர் அனைவருக்கும இது முதற்கொண்டு அடியேன் செயலர் திருப்பணியை ள்ளதாகவும், ஆசீர்வாதமாகவும் இருக்கவும் ஜெபிப்போம்.

செய்ய இருக்கிறேன் என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன், தொடர்ந்து நாம் அனைவரும் இணைந்து திருச்சபையின் ஊழிய வளர்ச்சிக்காகவும் ஊக்கமாக ஜெபிப்போம், தொடர்ந்து உழைப்போம். நமது திருச்சபை இன்னும் அநேகருக்கு பயனு

இறைப் பணியில்

## Mr. C . Havin Heba

முன்னாள் திருச்சபைச் செயலர்



கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக, அழைக்கப்பட்ட அழைப்பிற்கு பாத்திரவான்களாய் நடந்து கொள்ள திருச்சபையின் செயலராக பணியாற்ற ஊக்கமும் ஞானமும் பெற இன்னும் அதிகமாய் இறைப்பணியை தொய்வில்லாமல் செய்திட ஜெபிக்கவும், ஜெயம் பெறவும், எல்லாம் வல்ல இறைவன் நம்மை ஆற்றி தேற்றுவாராக!

**உங்கள் சிந்தனைக்கு!**

நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருக்க!
அந்த வார்த்தை கர்த்தராக இருந்து உங்களை ஆட்கொள்ள!
அதே வார்த்தையால் – விசுவாசத்தில் பெருகிட!
அதே வார்த்தை – சத்தியம், சத்தியத்தால் பரிசுத்தம்,
பரிசுத்ததால் சீடத்துவம், சீடத்துவம் அன்பில் நிலைக்க,
கர்த்தரும் அன்பில் (அவனுள்) நிலைத்திருப்பாராக!

**"நீங்கள் என்னிலும் என் வார்த்தை உங்களிலும்"** (யோவான் 14:23)

உம்மில் அன்பாயிருந்து,
உன் வார்த்தையை கைக்கொண்டு, உண்மையான நீதியிலும்,
பரிசுத்தத்திலும் (எபேசியர் 4:24)
உருவாக்கப்பட்ட கர்த்தருடைய சாயலாக, புதிய மனிதனை அணிந்து கொள்வோம்!

**அன்பில் நிலைத்திருக்கிறவன் - கர்த்தரில் நிலைத்திருப்பான், கர்த்தரும் அவனில் நிலைத்திருப்பார்.** (2 யோவான் 4:16)

உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் கர்த்தர், விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும், சமாதானத்தினாலும் நிரப்புவாராக, ஆமென்!

இறைப் பணியில்

Mr. Santhosh Kumar

திருச்சபைச் செயலர்



# God Will See You Through

## No matter how difficult things get, the Lord will stay by your side.

### But God? Is He near?
### Will He help?

These are questions I've been struggling to answer, stressed recently to grasp clear ways and means of trusting the Lord in challenges. Through reflection and prayer, I've discovered several ways to help calm my heart and mind and to maintain focus on the One who has seen me through every time.

## Give the Problem - Solver the Problem.

**It may seem obvious, but the most vital way to trust God when we're overwhelmed is to turn from that challenge and back to Him. Doing so could seem ill-advised since trouble can be so loud—demanding that we give it our attention, as if it needs the most and best of us.**

**But trusting God with a trial means taking it first to Him. The psalmist explains why: "God is our refuge and strength." (Psalm 46:1). And then there's the critical truth of Psalm 28:7: "The Lord is my strength and my shield; my heart trusts in Him, and I am helped; therefore my heart triumphs and with my song I shall thank Him."**

## Let others help.



When hard times come, don't isolate yourself. Draw close to believing friends. Reconnect with trusted family members and allow them to "hold up your arms" during the rough battle. During a lengthy battle, Moses was helped this way by his older brother Aaron and their companion Hur (Ex. 17:10–13). Strong help connects others' steady faith to our own, like an anchor's chain, so we can renew our trust in God.

## Fear not.

Danger is real. Jesus affirmed this when He invited His disciples to cross the Sea of Galilee with Him. You know the story well. A storm arose, and the terrified disciples woke Jesus crying, "Teacher, do You not care that we are perishing?" (Mark 4:38).

After calming the wind and waves, the Lord posed a question of His own to the disciples: "Why are you afraid? Do you still have no faith?" (Mark 4:40). Despite living daily with Jesus, they'd underestimated Him and His power. We can learn from their lesson—as well as our own experiences—that Jesus can calm any and all raging winds, including ours.

## Tell God about your current squall.



The psalmist says the Lord keeps track of all our stormy sorrows, putting our "tears in [His] bottle" (Psalm 56:8), never forgetting any of our hard trials. He cares about us. Relying on Him, therefore, means taking time to tell Him our struggles and, by faith, asking Him to intervene. Certainly, the Lord already knows, but pausing to tell Him in prayer is a concrete way to show we trust Him to be the answer.

## Commit to know God.

People and other things in our life may dodge and dart around, but God is unmovable. We can trust in Him even if our faith feels weak and we don't see how He is going to answer our cries for help. Instead, if we depend on Him, we're believing in His ability to be our God. Taking time to understand His constant strength means that when we need Him, we'll know Him to be reliable to deliver and answer.

## Look for sunshine.



Even during stormy times, the sun can break through. And so can the Son. Look daily for those moments that make you laugh, give you joy, and ignite your hope—and make note of them in a journal or the margins of your Bible. They are gifts from our merciful God, proof of His love that's well worth remembering (and passing down to your loved ones).



Trust is an anchor that holds us fast in the storm, and as Christians, we are able to access the best "holding ground" of all—God Himself. Life's storms will come, but by trusting God through them, we are held steady and safe in the knowledge that, whatever happens, we are close to the One who will see us through.



Article By

Mr. RAVINDRA





# எஸ்தர்

**முன்னுரை:**

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே அன்பின் வணக்கங்களும் ஸ்தோத்திரங்களும். நாம் இந்த மடலில், பொறுமையோடு இருந்து வேண்டினவைகளை பெற்றுக் கொண்ட எஸ்தர் ராஜாத்தியை பற்றி பார்ப்போம். நாம் நம்முடைய வேத புத்தகத்திலே, எஸ்தருக்கு என்று ஒரு அதிகாரம் இருப்பதை பார்க்கிறோம். அப்படியெனில் அவள் ஒரு குறிப்பிட்ட இடம் பெற்று இருக்கிறாள்.

**எஸ்தர் வாழ்க்கை வரலாறு:**

மொர்த்தகாயின் சிறிய தகப்பனுடைய குமாரத்தி தான் எஸ்தர். தன்னுடைய சகோதரனான மொர்த்காய் மூலம் வளர்க்கப்பட்டாள். சூசான் அரண்மனையில் மிகவும் ரூபவதியான எஸ்தர், அகாஸ்வேரு ராஜாவினடத்தில் கொண்டு போகப்பட்டாள். ராஜா சகல ஸ்திரீகளைப் பார்க்கிலும் எஸ்தர் மேல் அன்பு வைத்ததினால், அவளை பட்டத்து ஸ்திரீயாக்கினான்.

**கீழ்ப்படிதல்:**

எஸ்தர், தன்னுடைய சகோதரனான மொர்த்காய் மீதுமரியாதையாய் இருந்தாள். தான் வளரும்போது சகோதரனுடைய சொல் கேட்டு கீழ்ப்படிந்து நடந்து கொண்டாள். அதேபோல் அரண்மனைக்கு சென்ற பிறகும், தன் சகோதரனுக்கு கீழ்ப்படிந்து நடந்து கொண்டாள்—(எஸ்தர்2:20).

**உபவாசம்:**

ஆமான் மூலமாக தனக்கும் தன்னுடைய யூத குலத்திற்கும் வரவிருக்கும் ஆபத்தை எஸ்தர் அறிந்து, மூன்று நாட்கள் உபவாசம் இருந்து கர்த்தரை வேண்டிக் கொண்டாள். மிகவும் பொறுமையோடு இருந்து ராஜாவின் கண்களில் தயை பெற்றாள், எஸ்தர் (எஸ்தர் 4:16).

எஸ்தர் தான் செய்த விருந்துக்கு ராஜாவையும், ஆமானையும் அழைப்பித்து, தன்னுடைய ஜனத்தை அழிவிலிருந்து காப்பாற்றும்படி பொறுமையோடு வேண்டிக் கொண்டாள். தன் பொறுமையினிமித்தம் யூத குலத்தையே அழிவிலிருந்து காப்பாற்றி விட்டாள் (எஸ்தர் 8:16).

**முடிவுரை:**

நாம் நமக்கு கிடைக்கும் போதுமான சமயங்களில் பொறுமையோடு ஆண்டவரின் பாதம் அமர்வோம்.இயந்திர உலகத்திலே வாழுகிற நாம், அனைத்து வேலைகளும் துரிதமாய் நடந்தேற வேண்டும் என நினைக்கிறோம். வேலை செய்யும் இடங்களிலும் பொறுமை நமக்கு அவசியம். அப்படி துரிதமாய் காரியங்கள் நடக்கவில்லையெனில் நாம் பல வேளைகளில் சோர்ந்து போகின்றோம்.

எஸ்தரை போல் உபவாசித்து பொறுமையாய் காத்திருப்போம். ஏற்ற காலத்தில் தேவன் நமக்கு ஏற்ற ஆசீர்வாதங்களைத் தருவார். பொறுமையோடு காத்திருப்போம், அற்புதங்களை பெற்றுக் கொள்ளும் வரை அல்ல, நம் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும், அனைத்து காரியங்களிலும் தேவ சித்தம் நிறைவேற பொறுமையை கையாள்வோம், தேவ ஆசீர்வாதம் பெறுவோம். தேவன் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்!




Article by

**MRS. BANUPRIYA**

WOMEN'S Fellowship

# ஸ்தேவான் அனுபவித்த சிலுவை !



ஸ்தேவான் தொழுதுகொள்ளுகையில், அவனைக் கல்லெறிந்தார்கள் - (அப். 7:59)

நல்லதை செய்ததால் அல்லது சொன்னதால் மற்றவர்களுடைய கோபத்துக்கு ஆளாகி புறக்கணிக்கப்பட்டிருக்கிறீர்களா? உங்களைப் புரிந்துகொள்ளாதவர்களால் துன்பத்துக்குள்ளாகியுள்ளீர்களா? ஸ்தேவான் சுமந்த சிலுவையும் அப்படிப்பட்டதுதான். ஸ்தேவான் பரிசுத்தாவியும், ஞானமும், விசுவாசமும், நற்சாட்சியும் பெற்றவன். விதவைகளைக்கரிசனையோடு விசாரித்தவன். ஆசாரியர்கள் பலரும் விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு தேவவசனம் விருத்தியடைய பாடுபட்டவன்.


இப்படிப்பட்ட ஸ்தேவான் இயேசுவைப்போலவே பொய்க்குற்றஞ்சாட்டப்பட்டான். ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பதாக நிறுத்தப்பட்டான். ஆனாலும், ஸ்தேவான் பயப்படவில்லை. "நீங்கள் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளவில்லை" என்று பயமின்றிச் சொன்னான். அவர்களோ கோபங்கொண்டனர். ஸ்தேவான் கண்ட தரிசனத்தினிமித்தமும் அவனை நகரத்துக்குப் புறம்பே கொண்டு போய் கல்லெறிந்தார்கள். ஸ்தேவானோ இயேசுவைப்போலவே தன்னைத் துன்புறுத்துகிறவர்களுக்காக ஜெபித்து நித்திரையடைந்தான்.

மேலதிக விசாரணையின்றியே கொலை செய்யப்பட்ட இந்த விஷயம் அநியாயம் என்றும், ஸ்தேவான் சிறிது புத்தியாக நடந்திருக்கலாம் என்றும் நமக்குத் தோன்றும். கிறிஸ்துவுக்காய் இத்தனை வைராக்கியமாக இருந்ததற்கு இதுவா பரிசு?

ஆம், அந்நாட்களில் இயேசுவைப்போலவே அவருக்காக மரிக்கக் கிடைப்பது பெரிய பாக்கியம் என்று விசுவாசிகள் நினைத்தனர். அவருடைய நாமத்திற்காகத்தாங்கள் அவமானமடைவதற்குப் பாத்திரராக எண்ணப்பட்ட படியினால், அவர்கள் சந்தோஷமடைந்தனர் (அப்.5:41).

ஸ்தேவான் மரிக்கும்போது கண்டதரிசனம் உயிர்த்தெழுதலை உறுதிப்படுத்தியது. நேரடியாகவோ மறைமுகமாகவோ பல தாக்கங்களைக் கொண்டுவந்தது. பிலிப்புவின் சுவிசேஷ பணியும், சவுலின் மனமாற்றமும், பேதுருவின் சுவிசேஷ பயணமும், அந்தியோகியாவில் சபை ஸ்தாபிக்கப்பட்டதும் ஸ்தேவானின் மரணத்திற்குப் பின்னர்தானே! தேவபிள்ளையே, மரணத்தின் வாசலில் நின்று தன்னைக் கல்லெறிகிறவர்களுக்காக ஸ்தேவான் ஜெபித்தது பரிசுத்தாவியானவரின் கிருபையே அன்றிவேறில்லை. அதுவே ஸ்தேவான் சுமந்த சிலுவையின் பெரிய வெற்றி. வார்த்தைக்குக் கீழ்ப்படிகிறதில் நமக்கு உண்டாகும் எந்தவொரு கஷ்டத்தையும் துன்பத்தையுங் குறித்தும் கலங்கவேண்டாம். நமக்குள் இருக்கும் தூய ஆவியின் கிரியைக்கு நம்மை ஒப்புக்கொடுப்போம். நாம் சுமக்கும் சிலுவையை நமக்கு வெற்றியின் சின்னமாக அவர் மாற்றிடுவார்!

உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிற ஆண்டவரே, என்ன நேர்ந்தாலும் என் ஒவ்வொரு செயலும் உம்மை வெளிப்படுத்துகிறதாய் இருக்க தூய ஆவியானவரின் பெலன் தாரும்.




ARTICLE BY

## MR. J. STEPHEN CHELLARAJ

YOUTH FELLOWSHIP



# BE A GOOD FOOD ROLE MODEL

ARTICLE BY
MRS. JACKULIN HAVIN

**You are the most important influence on your child. There are many things you can do to help your children develop healthy eating habits for life. Offering a variety of foods helps children get the nutrients they need from every food group. It also makes them more likely to try and enjoy new foods. When children develop a taste for many types of foods, it's easier to plan family meals. Cook together, eat together, talk together, and make mealtime a family time.**

## Go Food Shopping Together

Grocery shopping can teach your child about food and nutrition. Discuss where vegetables, fruits, grains, dairy, and protein foods come from. Let your children make healthy choices.

## Get Creative in the Kitchen

Cut food into fun and easy shapes with cookie cutters. Name a food your child helps make. For example, serve "Janie's salad" for dinner. Encourage your child to invent new snacks. Make your own trail mixes from dry whole grains, low-sugar cereal, and dried fruit.

## Offer the Same Foods for Everyone

Stop being a short-order cook by making different dishes to please everyone. It's easier to plan family meals when everyone eats the same foods.

## Show by Example

Eat vegetables, fruits, and whole grains with meals or as snacks. Let your child see that you like to munch on raw vegetables. Try new foods yourself and describe their taste, texture, and smell. Offer one new food at a time. Serve something your child likes along with the new food. Offer new foods at the beginning of a meal when your child is very hungry. Avoid lecturing or forcing your child to eat.

## Focus on Each Other at the Table

Talk about fun and happy things at mealtime. Turn off the television, and take phone calls later. Try to make eating meals a stress-free time.

## Make the Most of Family Mealtime

Eating meals together gives you a chance to help your child develop a healthy attitude toward food. It also allows you to serve as a healthy eating role model, ensure that your kids are eating nutritious foods, introduce your family to new

foods, establish a regular meal schedule, and keep in touch with family members.

Here are some tips on making the most of family meals:

- **Schedule meals at regular intervals:** Without a schedule, kids tend to snack more and often reach for high-calorie foods.

- **Space snacks between meals:** Two to three snacks per day are enough for most children.

- **Plan to eat at least one meal together every day:** If it's difficult to get everyone together for dinner, how about breakfast? Try designating one or two nights a week as family night, with everyone helping to prepare the meal.

## Listen to Your Child

If your child says they are hungry, offer a small, healthy snack—even if it is not a scheduled time to eat.

## Reward with Attention, Not Food

Show your love with hugs and kisses. Comfort with hugs and talks. Choose not to offer sweets as rewards. This can make your child think sweets or dessert foods are better than other foods. When meals are not eaten, kids do not need extras—such as candy or cookies—as replacement foods.

## Limit Screen Time

Allow no more than two hours a day of screen time, like TV and computer games. Get up and move during commercials to fit in some physical activity.

## Encourage Physical Activity

Make physical activity fun for the whole family. Involve your children in the planning. Walk, run, and play with your child instead of sitting on the sidelines. Set an example by being physically active and using safety gear, like bike helmets.







# AUGUST WINNERS

## KIDS COLORING

- HAZEL HARTLYN
- JESIL BERNICE
- JANIA PRENI
- JOSHUA JOSE
- JOHANA JOSE

## FIND THE WAY

- HAZEL HARTLYN
- JESIL BERNICE
- JOHAN SANJO
- JANIA PRENI
- SHERINSHA
- JOSHUA JOSE
- JOHANA JOSE

## WORD SEARCH

- JOHAN SANJO
- JANIA PRENI
- SHERINSHA
- JOSHUA JOSE

## CROSS WORDS

- JOHAN SANJO
- SHERINSHA

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

Email Subject: Your name / Quiz, type / Month - Year

To Church Email: csitcalain@gmail.com

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# 1SAMUEL 8-19

## 1சாமுவேல் 8-19

SEPTEMBER '24 - QUESTIONS

1. சாமுவேலின் சொல்லைக் கேட்காமல் ஜனங்கள் கேட்ட காரியம் என்ன?
2. ஞானதிஷ்டிக் காரனிடமே வந்து ஞான திஷ்டிக்காரன் வீடு எங்கே என்று கேட்டது யார்?
3. "காது கேளாதவன் போல இருந்தவன்" யார்?
4. சாமுவேல், சவுலை ராஜாவாக ஏற்படுத்தின இடம் எது?
5. யாருடைய விண்ணப்பத்தினால் கர்த்தர் மழையை கட்டளையிட்டார்?
6. ஆயுதங்களை உண்டு பண்ணாத படிக்கு இஸ்ரவேல் தேசத்தில் யார் இல்லை?
7. பெலிஸ்தரைத் தொடராமல் திரும்பி விட்டது யார்?
8. பலியைப் பார்க்கிலும் உத்தமமானது எது?
9. இசைக்கருவியை மீட்டி, தீய ஆவியை விரட்டியது யார்?
10. தம்பியிடம் கோபமாக பேசின அண்ணன் யார்?
11. ராஜாவுக்கு மேய்ப்பனான மருமகன் யார்?
12. தாவீதும், சாமுவேலும் தங்கியிருந்த இடம் எது?

QUIZ TIME

### ஜூலை- 2024-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. ரூத்1:20 | 2. ரூத் 2:18 | 3. ரூத் 3:15 | 4. ரூத் 4:17 | 5. 1சாமு 1:19 | 6. 1சாமு 2:20
7. 1சாமு 3:16 | 8. 1சாமு 4:22 | 9. 1சாமு 5:6 | 10. 1சாமு 6:19 | 11. 1சாமு 7:16

திருமதி.பிப்ளின் நெல்சன், திருமதி. ரேனா ஜோஸ், செல்வி. அஜின்ஷா,
திருமதி.ஜெபின் அற்புதக்கனி, திருமதி.ராதிகா செல்வகுமார்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / September'24 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

# CFC 2024 Registration

**Memory Verse**

*Its compulsory for all the classes.
*CBS teachers will share the verse for their respective classes.



**Story Telling**

*It should be biblical story.
*Story length: Min 1min –Max- 3min.
*For Seniors and Teen classes.



**Fancy Dress**

*It should be biblical fancy dress.
*Action/Dress/Dialogue will be conducted as extra Marks



**Singing**

* It should be Biblical songs.
* The song should be sung without instrument or Karaoke.
* Song length – Max 2min
* For all classes.



**Register your Names in the belowmentioned what's up number**

**Mr. Ravindra (CFC Co-Ordinator) +971 544044038**




**Mrs. Sherin Verslin (CBS Director) +91 9789729663**

Name:

Date:

# Kids Coloring

# RUTH

"ALL THAT YOU SAY, I WILL DO."




Find the Way

Name : ........................................

# RUTH & NAOMI

Show Ruth and Naomi the way to Israel.






# WORD SEARCH

## Ruth

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | R | P | A | H | J | P | U | D | V |
| J | N | A | O | M | I | G | J | A | M |
| E | M | O | A | B | I | G | E | V | D |
| S | R | E | P | G | O | D | S | I | S |
| S | O | J | F | Y | D | R | U | D | Q |
| E | B | G | X | E | D | O | S | G | E |
| D | E | E | L | I | M | E | L | E | K |
| A | D | P | F | B | O | A | Z | B | N |
| D | B | E | T | H | L | E | H | E | M |
| Y | L | F | T | K | R | U | T | H | J |

| | | | |
|---|---|---|---|
| Bethlehem | Elimelek | Jesus | David |
| Jesse | Orpah | Naomi | Moab |
| Obed | Boaz | Ruth | God |

Name : ..................................................................

CROSS WORDS

Name : ..........................................................................

# Ruth and Naomi Crossword





**Across**

1. This is the place that Naomi wanted to move back to.
3. The name of the kind man that owned the field where Ruth worked.
5. The type of grain that Ruth would pick up after the harvesters.
7. This was the name of Naomi's daughter-in-law who stayed with her.
9. All of Ruth's immediate family ____ so she decided to move back to her hometown.
10. Ruth and Naomi's story is a story about ____.

**Down**

2. This is the act of putting someone's interests before your own.
4. Boaz and Ruth later fell in love and were ____.
6. Naomi encouraged Ruth and Orpah to move back to their own ____.
8. The number of sons Naomi had.

# SEPTEMBER - 2024

| | |
|---|---|
| 01-SEPTEMBER | Master. Allen Riyo S/o Mr. Robert Wilson.T |
| 02-SEPTEMBER | Mrs. Shafeena |
| 04-SEPTEMBER | Mr. Celin Jose |
| 04-SEPTEMBER | Mrs. Jamuna Rani |
| 05-SEPTEMBER | Mrs. J.N. Basil Shallu |
| 05-SEPTEMBER | Mrs. K.V. Ashmitha Lifin Raj |
| 08-SEPTEMBER | Dr. Divya Dharshini |
| 09-SEPTEMBER | Mr. J. Vinith Samuel |
| 10-SEPTEMBER | Rev.S.Baktha Thiyagarajan |
| 10-SEPTEMBER | Mrs. R. Muneeswari |
| 10-SEPTEMBER | Mrs. Shiby Angel |
| 10-SEPTEMBER | Mr. M. Asphin Raj |
| 11-SEPTEMBER | Ms. Jemima Ashni |
| 11-SEPTEMBER | Master. Samuel Hebron Stephen S/o Stephen Pradeepkumar. |
| 12-SEPTEMBER | Mrs. J.P. Pamela Jennifer |
| 13-SEPTEMBER | Mr. I. Berlin Jose |
| 13-SEPTEMBER | Mr. Joel Singh Edison |
| 17-SEPTEMBER | Mrs. Augusta Lawrence |
| 18-SEPTEMBER | Mr. Nelson Sopitha Raj |
| 19-SEPTEMBER | Mrs. P. Hemalatha |
| 21-SEPTEMBER | Mr. K.S. Suji kumar |
| 22-SEPTEMBER | Mr. S. Jesvin Bose |
| 23-SEPTEMBER | Ms. Janet Thirza D/o Mr. Arunkumar |
| 23-SEPTEMBER | Mr. Sharon S. Rao |

| | |
|---|---|
| 24-SEPTEMBER | Ms. Shivi Mol Shalinal |
| 24-SEPTEMBER | Mr. Danesh Yogendra Rao |
| 27-SEPTEMBER | Ms. Pragathi D/o Mr. Ravichandran. A |
| 28-SEPTEMBER | Mrs. S. Divya Sherrin |
| 28-SEPTEMBER | Mrs. Annie pamila |
| 29-SEPTEMBER | Mrs. Sugitha Isravel |
| 30-SEPTEMBER | Master. Immanual S/o Mr. Suresh Babu. |

# SEPTEMBER Wedding ANNIVERSARY

**02- SEP**
Mr. D. Jeyakumar
&
Mrs. J. Vivilin Juni

**03- SEP**
Mr. P. Chandrasekar
&
Mrs. Harika Chandrasekar

**05- SEP**
Mr. Praveen Paul
&
Mrs. Sugitha Isravel

**07- SEP**
Mr. Suresh Rajan
&
Mrs. Anitha Rajan

**09- SEP**
Mr. Danesh Yogendra Rao
&
Mrs. Annie Selvi Dan

**11- SEP**
Mr. J. Vinith Samuel
&
Mrs. M. Aishwariya

**15- SEP**
Mr. Prince Emmanuvel
&
Mrs. Josephine Nimshi

**16- SEP**
Mr. D. Rajavel
&
Mrs. Jein Arputhakani Rajavel

**16- SEP**
Rev. S. Baktha Thiyagarajan
&
Mrs. Velanganni

**16- SEP**
Mr. A. Stalin Jose
&
Mrs. J. Babi Kutti




**EDITOR**

**THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE**
**TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348**

**Email: csitcalain@gmail.com**
**Web: csitamilparishalain.org**

**STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY**